NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 2 February 2023

# நீடித்த நிலைத்தன்மை முயற்சிகளுக்கான புதிய விருதுகள்

நீடித்த நிலைத்தன்மையுடன் கூடிய வர்த்தகங்களை உருவாக்க விரும்பினால், நிறுவனங்கள் அதன் தொடர்பிலான சான்றிதழ்களைப் பெறுதல், விருதுகளுக்கு விண்ணப்பித்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. நிறுவனங்களுக்கு இத்தகைய முயற்சி கைகொடுக்கும் என்று போக்குவரத்து, நீடித்த நிலைத்தன்மை, சுற்றுச்சூழல் ஆகிய துறைகளுக்கான மூத்த துணையமைச்சர் ஏமி கோர் கூறினார். பசுமை நிதியுதவியைப் பெறுவதற்கு நிறுவனங்களுக்கு இது உதவும் என்றார் அவர்.

நீடித்த நிலைத்தன்மை தாக்கத்துக்கான விருது பற்றிய அறிவிப்பு நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். எஸ்பிஎச் மீடியா செய்தி நிலையத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பிசினஸ் டைம்ஸ் நாளேடும் யுஓபி வங்கியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக வர்த்தகப் பள்ளியின் நிர்வாகம், நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றுக்கான நிலையம் இந்த விருதுகளுக்கு அறிவுசார் பங்காளியாகச் செயல்படும். பசுமை முயற்சி என்ற பெயரில் நடைபெறும் மோசடிகளைத் தவிர்ப்பது இதன் நோக்கம்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.